ஸ்ரீதந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸாதாரண
தை

FEBRUARY
1971



தொகுதி 33
பகுதி 2

Vol. 33
No. 2

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா.

பிரகரகர்த்தா :
வைத்ய T S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

புத்துயிர் பெறும் அறிகுறி ... 27
வாத சோணித விசாரம் ... 29
ஸஹஸ்ரயோகம் ... 34

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு. தெப்பக்குளம். திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய
# ஆர்ய வைத்தியசாலா

**கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)**

THE ARYA VAIDYA SALA KOTTAKAL

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

| | | |
|---|---|---|
| நர்ஸிங்ஹோம் | | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | | போன் நெ 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) | போன் நெ 27 |
| | (ஆபீஸ்) | போன் நெ 61 |
| மானேஜர் | (வீடு) | போன் நெ. 26 |

**சென்னை கிளை :**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள் :**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணுகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

**மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்**

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
**ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.**

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு விற்பனை டிப்போ:
31, A. சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2.

Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும்
வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன்
குறைந்த விலையில் மொத்தமாகவும்,
சில்லரையாகவும் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும் மருந்துகளின்
செய்முறையை விளக்கும்

## ஔஷத யோக ஸங்கிரஹம்

**முதல் பாகம்**

பிரதி விலை ரூ. 5-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங் டைரக்டர்.

GRAM : KALIA

Phone: { Off. 3232 / Res. 4343 }

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk per gram | | 50-00 |
| Pure Saffron | | 2-50 |
| Pure Gorochanam per gram | | 12 00 |
| Pure Pearls Spl. | ,, | 11-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ,, No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ,, | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |
| **PACHAKARPURAM** | | |
| Spl. Bhimseni | per gram | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |
| **CRUDE DRUGS** | | |
| Attis Bitter | ,, | 100-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,, | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 6-50 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 6-50 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |
| **AYURVEDIC MEDICINE** | | |
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 300-00 |
| Swaran V ng | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200-00 |
| KantLoh Bhasam | ,, | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

**Please ask for detailed Price List 6½% Commission to the readers of Vaidya Chandrika**

தந்தி: "அம்ருதம்"      P. B. No. 1382.      போன்: 26006

# ஸ்ரீ ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்.,

**தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18**

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

எங்களுடைய கிளைகள்:

| | | |
|---|---|---|
| 1. | 23 B, பூஸா ரோடு, புது டில்லி : | போன் ; 585687 |
| 2. | மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞும்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18 | ,, 32988 |
| 5. | பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1 | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18, | ,, 33758 |
| 12 | இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | 229, ராஜவீதி, கோயமுத்தூர்-1 | ,, 33988 |
| 14. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | |
| 15 | No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | |

பாக்டரி:
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம்:
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

---

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

# வாரியர்

# க்ஷீரபலா - 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

**விலை 25 ML ரூ. 7-00; 12 ML. ரூ 3–75**

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

# PURI BROTHERS (REGD.)

**Musk, Saffron and Indian Drugs Merchants**

## JULLUNDUR-1

Tele : "VENKATESH" Phone : **3923**

**PRICE LIST FOR 1970**

| | | Rs. P. |
|---|---|---|
| Pure Musk | per gram | 35-00 |
| Pure Saffron | ,, | 1-75 |
| Pure Gorochanam | ,, | 9-00 |
| Pure Pearls special | ,, | 10-00 |
| Pure Pearls No. 2 | ,, | 8-00 |
| Pure Pearls No. 3 | ,, | 6-00 |
| Pure Amber No. 1 | per gm. | 4-00 |
| Pure Amber No. 2 | ,, | 3-50 |
| Pure Amber No. 3 | ,, | 3-00 |
| Pure Amber Black | ,, | 1-00 |

### PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni | per gram | 0-25 |
| Singapuri (Yellow) | ,, | 0-20 |
| German or Japan | | 0-20 |
| Ashtavargam | per Kilo | 14-00 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kashir Kakoli | ,, | 14-00 |
| Ridhi Vridhi | ,, | 12-00 |
| Suryatapi Silajit No. 1 | per Kilo | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

### BHASAMS

| | | |
|---|---|---|
| Rajit Bhasam | per K.G. | 1000-00 |
| Tamber Bhasam | ,, | 220-00 |
| Abhrak (100 times) | ,, | 230-00 |
| Abhrak (60 times) | ,, | 160-00 |
| Bank Bhasam | ,, | 160-00 |
| Akik Bhasam | ,, | 50-00 |
| Shilajit | ,, | 30-00 |
| Annabedi Bhasam | ,, | 30-00 |
| Swaran Magshika | ,, | 60-00 |
| Nag Bhasam | ,, | 120-00 |
| Pearl Bhasam [illegible] | per ten gram | 100-00 |
| Parda Bhasam | ,, | 10-75 |

| | | Rs. P. |
|---|---|---|
| Hingul Bhasam | per ten gm. | 10-75 |
| Loh Bhasam (special) | per K. G. | 130-00 |
| Loh Bhasam No. 1 | ,, | 75-00 |
| Mandur Bhasam | ,, | 30-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Shring Bhasam | ,, | 30-00 |
| Vaikrant Bhasam | ,, | 180-00 |
| Hartal Godanti | ,, | 30-00 |
| Kant Lah Bhasam | ,, | 250-00 |
| Parwal Bhasam | ,, | 175-00 |

### PILLS (GUTTIKA)

| | | |
|---|---|---|
| Agnitundi Vati | per ten gm. | 1-00 |
| Basant Kushmakar | ,, | 50-00 |
| Chander Odya Ras | ,, | 40-00 |
| Sanjeevani Vati | ,, | 6-00 |
| Eladi Vati | per K. G. | 35-00 |
| Echha Bhedi Ras | ,, | 60-00 |
| Kaf Ketu Ras | ,, | 50-00 |
| Kan Kayan Vati | ,, | 45-00 |
| Khadi Radi Vati | ,, | 45-00 |
| Lavangadi Vati | ,, | 120-00 |
| Mritunjaya Ras | ,, | 125-00 |
| Mandur Vati | ,, | 40-00 |
| Sankh Vati | ,, | 50-00 |
| Shul Gaj Kesar Vati | ,, | 80-00 |
| Nityodit Ras | ,, | 125-00 |
| Chander Prabha Vati | | 60-00 |
| Maha Jograj Guggal | ,, | 110-00 |
| Jograj Guggal | ,, | 35-00 |
| Kishore Guggal | ,, | 33-00 |
| Kanchanar Guggal | ,, | 35-00 |
| Raj Parsadani Vati | 30 pills | 1-00 |
| Mridu Virechan | 1000 ,, | 16-00 |
| Leucorhin | 1000 ,, | 50-00 |
| Kasari Pills | 1000 ,, | 30-00 |

5% Commission will be allowed on all orders received direct by us

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHALLA BROTHERS (Regd.)**

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

***K. L. TALWAR & BROS.,***

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.




# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 33 | சாதாரண தை | பகுதி 2 |
| Vol. 33 | 1971 பிப்ரவரி | No. 2 |


நம: சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुर्वर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## புத்துயிர் பெறும் அறிகுறி

சென்ற மாதம் தலையங்கத்தின் முடிவில் 71-ம் ஆண்டு நமது தேசிய வைத்யத்திற்கு புத்துயிர் ஏற்படும் என்று நம்புகிறோம் என எழுதியிருந்தோம். அதற்கான சில அறிகுறிகள் தென்படுகின்றன.

தேசம் செழிக்க வேண்டுமானால் நில வளத்துடன் காலத்தில் மழைபெய்து பாசன வசதியும் சரியாக இருக்க வேண்டும். அது போல் ஓர் கலை வளர வேண்டுமானால் மொழியின் அபிவிருத்தியும் அந்தக் கலையின் திறமையான போதனைப் பயிற்சியும் தேவை

நமது தமிழ்நாட்டில் சில காலமாக ஆயுர்வேதம் வளர முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை எல்லோரும் அறிவர், இந்திய வைத்யக் கல்லூரியில் சம்ஸ்கிருதம் படித்த மாணாக்கர்கள் இல்லாததால் ஆயுர்வேத வகுப்பு நடத்த முடியவில்லை. காரணம் தமிழ் நாட்டில் பள்ளிகளில் சம்ஸ்கிருதம் பயில வசதியில்லாததே. பலர் பல வழிகளில் முயற்சி செய்தும் தமிழ்நாட்டு அரசாங்கம் இதில் செவிசாய்க்காததால் பலன் கிட்டவில்லை அரசின் இரு மொழிக் கொள்கைக்கு இது ஒத்துவராததாக இருக்கலாம். எப்படி இருந்தால் என்ன ? ஒரு நல்ல மொழி விருப்ப பாடமாகக் கூட இருக்காமல் போய் விட்டால் அந்த மொழியில் உள்ள

உயர்ந்த விஷயங்கள் உலகத்திற்குக் கிட்டாமல் போய் விடும் என்பது உண்மை. இந்த உண்மையை உணர்ந்து மத்ய அரசாங்கம் நடத்தும் பள்ளிகளில் சம்ஸ்கிருதம் மூன்ருவது மொழியாக கட்டாய பாடமாக ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கனம் மந்திரி பக்த தர்சன் அவர்கள் தெரிவித்து இருக்கிருர்கள். இது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய தொன்ருகும். இதனுல் சம்ஸ்கிருதம் வளர்ச்சியுறுவதுடன் பல சாஸ்திரங்களும் வளர்ச்சி பெறும். நமது தமிழ் நாட்டிலும் மத்ய அரசாங்க உதவியுள்ள பள்ளிகள் பல தோன்றினுல் ஆயுர்வேத வகுப்பு காலியாக இருக்காது. நமது அரசாங்கம் ஆயுர்வேதம் படிக்க யாரும் வர வில்லையே என்று குறைப்பட்டுக் கொள்ள இடமும் ஏற்படாது. தமிழ்நாட்டைத் தவிர மற்ற மாநிலங்களில் தற்போதும் சம்ஸ் கிருதம் படிக்க வசதியுள்ளதால் ஆயுர்வேத அபிவிருத்திக்கும் வசதி இருந்து வருகிறது உதாரணமாக கேரள அரசாங்கத்தின் ஆயுர்வேத வைத்ய அபிவிருத்தி பற்றிய முற்போக்குத் திட்டத்தைக் குறித்து கேரள முதல்வரும் சுகாதார மந்திரியும் பேசியுள்ளவைகளை இங்கு குறிப்பிடுகிருேம்.

கடந்த 25-1-71-ந்தேதியன்று நல்ல செல்வாக்குள்ள ஒரு திருவனத்தாரால் ஏற்படுத்தப்பட்டதும் கேரள ராஜ்யத்திலே முதல் முதலாக ஆரம்பிக்கப்படுகிறதுமான ஒரு ஆயுர்வேதிக் நர்சிங்ஹோமை திறந்து வைத்து கேரள ரஜ்ய முதன் மந்திரி கனம் ஸ்ரீ C அச்சுதமேனன் அவர்கள் பேசுகையில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஆயுர்வேத வைத்ய சாஸ்திரங்களின் சிறப்புகளைப்பற்றி புகழ்ந்து பேசினுல் மட்டும் போதாது. ஆயுர்வேத வைத்யம் இங்கிலீஷ் முறை வைத்யம் இவை இரண்டின் குண விசேஷ தாரதம்யங்களைப்பற்றின சர்ச்சை தேவை இல்லை ஒவ்வொன்றும் தனிச் சிறப்புக்கள் வாய்ந்தவை. ஆயுர்வேத மருநதுகள் பழைய காலத்தில் கிடைத்தன போல் மலிவான விலையில் ஜனங்களுக்கு கிடைக்கும்படி செய்வதில் முக்ய கவனம் செலுத்த வேண்டும். தேசீய வைத்யமான ஆயுர்வேதத்தையும் ஆயுர்வேத வைத்ய சிகித்ஸை முறைகளையும் மேலும் அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஆராய்ச்சிகளைச் செய்யவேண்டும்" என்று.

ஷை திறப்பு விழாவிற்குத் தலைமை வகித்த கேரள ராஜ்ய சுகாதார மந்திரி கனம் ஸ்ரீ N. K. பாலகிருஷ்ணன் அவர்கள் தமது தலைமையுரையில் கேரளத்தில் ஒரு ஆயுர்வேத சர்வகலா சாலை ஏற்படுத்த கேரள அரசாங்கம் ஒரு திட்டம் தயாரித்துள்ளது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற சுமார் 9 கோடி ரூபாய்கள் செலவாகும். ஆகையால் மத்ய அரசாங்கத்தின் உதவியில்லாமல் அத்திட்டத்தை நிறைவேற்றுவது சாத்யமில்லை என்றும் சொன்னுர். இம்மாதிரி தமிழ் நாட்டிலும் ஆயுர்வேத வைத்யம் சித்த வைத்யம் இரண்டும் இரண்டு கண்கள் போல விளங்கும் நல்ல காலத்தை எதிர்பார்க்கிருேம்.

# வாத சோணித விசாரம்

வாதரக்த நோயைப்பற்றி எழுதப் புகுமுன் "வாதவ்யாதி பிரஸங்கேன வாதரக்தம் நிருப்யதே" என்று கூறினர்.

ஒரு தலைப்பில் விஷயத்தை விரிவாகக் கூறிய பிறகு அடுத்த தலைப்பை எடுத்துக்கொள்வது முன்பின் சம்பந்தம் இல்லாமல் இருக்கக்கூடாது சம்பந்தம் இல்லையெனில் பித்தனின் சொற்களுக்கு ஒப்பாக இருக்கும். இதை சாஸ்திர நூல்களில் "சங்கதி" எனக்கூறுவர். இம்மாதிரியான சங்கதிகளில் "பிரஸங்கம்" என்பதும் ஒன்றாகும். அதாவது ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லும் போது நம ஞாபகத்திற்கு வரும் மற்ற விஷயத்தையும் விட்டு விடாமல் அதையும் அடுத்தாற்போல் கூறி விடுவதாகும். இதையே "ஸ்மிருதஸ்ய உபேட்சாநர்ஹத்வம் பிரஸங்க:" என்று பிரசங்கத்திலுள்ள லட்சணத்தை கூறுவதிலிருந்து அறியலாம். ஆகவே வாத நோய்களை விவரிப்பதற்காக ஆரம்பித்த நாம் வாதரக்த நோயைப்பற்றியும் விவரிக்கிறோம் என்பது தான் முதலில் நாம் எடுத்துக்காட்டாக எழுதிய வாக்யத்தின் பொருளாகும்.

வாதநோய்கள் பலவற்றிலும் வாதரக்தத்திற்கு தோஷம் ஏற்படுகிறது. ஆகவே வாத நோய் என்று எண்ணிய உடனே வாதரக்த நோயின் ஞாபகம் வருகிறது என்பது மட்டிலும் இல்லை. வாத வியாதிகளுக்கும் வாதரக்தத்திற்கும் மிக்க நெருங்கிய தொடர்பு உண்டு என்பதையும் நாம் நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும். இதை "பட்சவதம் நரித்தலை வாதம்" இவைகளைப் பற்றி விவரிக்கும் பிரகரணத்தில் நன்கு தெரிந்துகொள்ளலாம்.

உதாரணமாக "சுத்த வாதஹதம் பட்சம் கிருச்சஸாத்யதமம் விது: சாத்யமந்யேந ஸம்ஸிருஷ்டம் அஸாத்யம் ஸர்வ ஹேதுகம்" என்றார் வாதம் மட்டிலும் தோஷமடைந்தால் மிகுந்த பிரயாசையாலும் மற்றவைகளுடன் சேர்ந்து ஏற்பட்டால் சுலபமாகவும் இந்நோயை குணப்படுத்தலாம் என்பது இதன் பொருள். இங்கு மற்றவைகள் என்பதனால் வாதரக்தம், பித்தம் முதலான தோஷங்கள் என்று கருத்து கொள்ளவேண்டும்.

மேலும் பக்ஷவாத நோய் உள்ளவர்களுக்கு வாதரக்த பீடை கண்கூடாகத் தெரிகின்றது. வாதரக்த நோயுடன் பட்சவத நோய் பீடித்தவனுக்கு வாதரக்தநோய்க்கு கொடுக்கப்படும் சிகித்ஸையாலேயே பட்சவத நோயும் சமனம் ஆகிறது என்பதையும் அனுபவத்தில் காண்கிறோம். ஆகவே தனியான ஓர் நோயாக

இருப்பினும் மற்ற ரோகங்களுடன் சேர்ந்தே காணப்படுகிறது. இந்நோய் ஏற்படும்போது மற்ற நோய்களும் கூடவே காணப்படுகின்றன. இந்த நோயை வாக்படாசாரியர் "வாத சோணிதம்" என்று பெயரிட்டுக் கூறுவர்.

சமஸ்கிருத மொழியில் ரக்த, சோணித அஸ்ருக், என்ற சொற்கள் பேதமின்றி ஒரே பொருளில் கூறப்படுகிறது என்றாலும் வாதரக்தம் என்பதும் வாத சோணிதம் என்பதும் வாதாஸ்ருக் என்பதும் ஒன்றாகும் எனக்கருதக்கூடாது. எல்லாம் அறிந்த சூட்சும தரிசியான வாக்படாசாரியர் வைத்த "வாத சோணிதம்" என்ற பெயரே மிகப் பொருத்தமான பெயராகும். ஏனெனில் ரக்தம் என்ற சொல் ரஞ்ஜக பித்தம் கலந்த "ரஸ" என்ற தாதுவையும் குறிப்பதால் அதன் பொருள் விரிவானதாக உள்ளது. சிரை மூலம் ஹ்ருதயத்தை நோக்கிச் செல்லும் ரக்த தாதுவை மட்டிலும் குறிக்கும் என்று ஏற்றுக்கொண்டால் "வாத ரக்தம்" என்ற பெயரும் பொருத்தமான பெயராக அமையலாம். ஆனால் ரக்தம் என்ற சொல் ரஸம் ரக்தம் இரண்டையும் குறிக்கும் என்று ஆகும் போது படிப்பவர்களுக்கு குழப்பமே ஏற்பட்டுவிடும். மேலும் ஆமவாதம்" என்ற நோயை "வாத ரக்தம்" என்றும் கூறலாம் என்றும் ஏற்பட்டுவிடும். ஏனெனில் "தமனீ: ப்ரதி பத்யதே" என்று கூறுவதனால் தமனியில் உள்ள நோயை ஆமவாதம் என்று கூறும்போது ரக்த என்ற சொல்லால் தமனியின் சம்பந்தத்தைக்கொண்டு கூறலாம் என்று ஆகிவிடும். ஆகையால் வாத ரக்தம் என்பது தமனியைப்பற்றிய நோய் அல்ல என்பதை நாம் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். வாத சோணிதம் என்று பெயரிட்டால் அப்பெயர் மிகப்பொருத்தமாக அமையும். "சோணித" என்ற சொல் "சோண்" என்ற பகுதியிலிருந்து உண்டான சொல்லாகும். அச்சொல் ஸிரை மூலம் ஹ்ருதயம் நோக்கிச் செல்லும் சிவப்பான ரக்தத்தைத்தான் குறிக்கும். "அஸ்ருக்" என்ற சொல் தமனி, ஸிரை, இரண்டு நாளங்கள் மூலமும் செல்லும் இரண்டுவித ரக்தத்தையும் குறிப்பிடும் தன்மையுள்ளது, ஆகவே அதுவும் பொருத்தமானதல்ல. வாத சோணிதம் என்ற சொல்தான் எல்லாவகையிலும் பொருத்தமான பெயராகும்.

ஸிரை மூலம் செல்லும் சோணிதத்தால் தடைபட்ட வாதம் வாத சோணிதம் என்றபெயரை அடைகிறது. சிரை ஆரம்பமாகும் கை, கால்களில்தான் முதலில் தோஷகோபம் தெரியவருகிறது. மிருதுவான, நடக்காத தொங்கும் கால்களை உடையவர்களுக்கு இந்நோய் உள்ளது என்பதனால் நிதானமும் ஸம்பிராப்தியும் சரியானவை.

வாத ரக்தம் என்பதை ரக்தவாதம் எனச்சிலர் கூறுவர். அது தவருகும். அது தற்காலத்தில் கூறப்படும் (Blood pressure) பிளட் பிரஷர் என்பன போன்ற தமனியைபற்றி நிற்கும் நோய்களேயே குறிக்கும். ஆதலால் வாத சோணிதம் என்றபெயர் பொருத்தமானது.

நாம் செய்யும் அபத்தியங்களால் கோபித்த வாதம் தோஷம் பெற்று வழிதவறி கெட்டரக்தத்தால் தடைபட்டு முதலில் ரக்தத்தை தோஷமடையச் செய்து வரிசையாக மற்றதாதுக்களேயும் தோஷமடையச்செய்கிறது இந்தநிலையைக் கொண்டே இந்நோயில் உத்தானம் கம்பீரம் என்ற இரு பிரிவுகளேக் கூறியுள்ளனர். தோல் மாம்சம் இவைகளேப் பற்றி நிற்கும் நேரத்தில் இந்நோய் உத்தானம் என்றும் மற்ற தாதுக்களேப் பற்றியபோது கம்பீரம் என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

உத்தான நிலேயில் உடல் உறுப்புக்களுக்கு துன்பம் அதிகமாக ஏற்படுவதில்லே. சுலபமாக நோயை குணப்படுத்திவிடலாம். கம்பீர நிலேயில் உடலின் ஊடே சென்று உடலுறுப்புக்களே வளேத்து முடமாக்கி விடுகின்றபடியால் இந்நிலேயில் இந்நோய் தணிக்கமுடியாததொன்ருகிவிடும்.

இந்நோயின் ஆரம்பகாலத்தில் சோணிதத்தால் வாதத்திற்குத் தடை ஏற்பட்டாலும் பிறகு சோணிதமும் வாதமும் ஒன்றை ஒன்று தடைபடுத்திக்கொள்ளும் நிலேயை அடைகின்றன. சோணிதத்திற்கு தோஷம் வாதம் பித்தம் சிலேஷ்மம் என்ற மூன்ருலும் ஏற்படலாம் என்பதை மிகச்சிறப்பாக தனக்கே உரித்தான வழியில் கூறியிருக்கிருர்.

இதில் ஒரு தோஷத்தால் ஏற்பட்ட நோய் சுலபமாக சமனம் பெறும். இரண்டு தோஷங்களால் உண்டான சமனமாகாது என்று இருந்தாலும் ஒருவாறு கட்டுப்படுத்தப்பட்டு வாழ்நாளே ஒருவாறு கழிக்கலாம். மூன்று தோஷங்களால் உண்டானதை தீராத நோய் என்றே கொள்ளவேண்டும்.

அஸாத்ய நிலேயில் உள்ள இந்நோய் மிகப் பயங்கரமானது. அதனுல்தான் இதை அந்நிலேயில் "அர்புத காரி" என்ருர் ஆசாரியர். புற்றுநோயை உண்டாக்கும் என்பது கருத்து. எலியின் விஷம் உடல் முழுவதும் பரவுவது போல் இந்நோய் உள்ளது என்று உதாரணத்துடன் கூறுவதிலிருந்தும் இந் நோயின் கொடூரத்தை நாம் அறிந்து கொள்ளலாம்.

பிரமேக ரோகம் உள்ளவர்களிடமும் இந்நோயின் அறிகுறிகள் தென்படுகின்றன. இந்நோயின் நிதானத்தில் கூறப் பட்டவைகள் பிரமேஹ ரோகிகள் விஷயத்திலும் பொருத்தமாக இருக்கின்றன.

இன்று நாம் வாதநோய்களுக்கு உபயோகிக்கும் க்ஷீரபலா தைலத்தை ஆசாரியர் வாதசோணித பிரகரணத்தில் கூறியிருக்கிறார். இதனால் வாத ரக்த சிகித்ஸையும் வாதசிகித்ஸையும் ஒரே மருந்தைக்கொண்டு செய்யலாம் என்பது வாக்படாசாரியரின் கருத்தாக ஊகிக்க இடமளிக்கிறது. இதை மனதில் கொண்டுதான் நாம் முன்பு வாத வியாதிகளுக்கும் வாத ரக்தத்திற்கும் மிக நெருங்கிய சம்பந்தம் உண்டு என்று கூறினோம். தற்காலத்தில் மிகப்பயங்கரமான தொன்றாகக் கருதப்படும் புற்று நோய்க்கும் காரணமாக உள்ளதென்றும் கூறியுள்ளார்.

வாத சோணித நோயாளிகளிடம் ரக்த வாதம் (Blood pressure) காணப்படுவதால் இந்த இரண்டு நோய்களும் ஒன்றாக இருக்கும் என்று எண்ண வேண்டியதில்லை. அபசீ, கண்டமாலை நோயாளிகளிடத்தும் சிலசமயம் வாத சோணிதம் காணப்படுகிறது.

ஆக இம்மாதிரி ஆராய்ந்து பார்க்குங்கால் எங்கு சிரையில் தோஷம் ஏற்பட்டு சோணிதம் தோஷத்தைப் பெறுகின்றதோ ஆங்காங்கு வாத சோணித நோய் ஏற்பட ஏதுவாகிறது என்று அறிவாளிகளுக்கு சுலபமாகப்புரியும்.

இந்நோயின் நிதானம் முதலான ஐந்து லட்சணங்களையும் பண்டைய நூல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம் என்பதனால் இங்கு நாம் அவைகளைக் குறிப்பிடவில்லை.

இந்நோயின் பிரிவான உத்தானம் கம்பீரம் என்றதனைக் கொண்டு இந்நோய்க்கான சிகித்ஸைகளையும் இரு வகைகளைக் கொண்டதாகக் கணக்கிடலாம்.

உத்தான நிலையில் பத்துப்போடுதல் முதலானவைகளை உபயோகித்தல் சிறந்ததாகும். கம்பீர நிலையில் கூறப்பட்ட சிகித்ஸைகளை ஆங்காங்கே உத்தான நிலையிலும் கைக்கொள்வதில் தவறுதல் இல்லை. நன்மையும் ஏற்படும். ஆனால் உத்தான நிலையில் கூறப்பட்டுள்ள சிகித்ஸைகள் கம்பீர நிலைக்குப் பொருந்தா.

பஞ்சகர்மாக்களை உபயோகிக்கலாம் என்று கூறியிருந்தாலும் இந்நோயாளிகளை நன்கு பரீட்சை செய்யாமல், வமனவிரேசனங்களை உபயோகித்தல் தகாது. பஸ்தி சிகித்ஸை எந்நிலைக்கும் பொருத்தமானதொன்றாகும். இதைச் செய்ய கஷாயம், கல்கம், நெய், எண்ணை இவைகள் கூறப்பட்டுள்ளன.

நம் அனுபவத்தில் உள்ள சிலவற்றை இங்கு சிறிது கூறுவோம்.

சீந்தில் கொடி மிகச்சிறந்ததொன்றாகும். பிப்பலீ ரஸாயனம் போல் சீந்தில் கொடியை அரைத்து இரும்புப் பாத்திரத்தில் தடவி

உலர வைத்து நல்ல தண்ணீரில் கலக்கிக் குடிக்க வேண்டும். இவ்வாறு ஓராண்டு செய்து வந்தால் ரஸாயனம் சேவிப்பதால் ஏற்படும் பயனும் நோய் நீங்குவதும் ஏற்படும். குருந்தோட்டிக் கஷாயம் திராட்சைக் கஷாயம் இரண்டையும் கலந்து ஜீரணத் திற்குத் தக்கபடி உட்கொள்ளலாம்

திராட்சைப் பழத்தை ஜீரணிக்கத் தக்கவாறு சாப்பிட்டு வரலாம்,

இங்கு "கோகிலாட்சக நிர்யூஹ" என்றுள்ள ஆச்சாரியரின் பாட்டை நாம் மறக்கலாகாது. "கோகிலாட்சக" என்ருல் கழுதை முள்ளி என்றும் கூறப்படும் வயல்களில் காணப்படும் "நீர் முள்ளி" யாகும்.

ரஸாயன முறையில் சிலாஜதுவை உபயோகிக்கலாம். சந்திரபிரபாவடி என்ற மருந்தை உபயோகிக்கலாம். சார்ங்கதர சம்ஹிதையில் கூறப்பட்ட லோஹ ரஸாயனம் சிறந்த மருந்து ஆகும் மற்றும் அவரவர்கள் அனுபவத்திற்கு ஒத்துள்ள மருந்து களைப் பற்றி நாம் கூறத்தேவையில்லை.

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

# ஸஹஸ்ரயோகம்

## முகரோக சிகித்ஸை (தொடர்ச்சி)

ரம்பாதி: கதளிவாழைக்கிழங்கை ஒட்டை செய்து அதற்குள் துணியை வைத்து அது நனைந்தால் எடுத்துப்பிழிந்து அத்துடன் தேனும் கலந்து உடனுக்குடன் மூன்று தடவை சாப்பிடவும். ரக்தாதிசாரம் தீரும்.

கரஞ்ஜாதி: புங்கம்பட்டை ரஸம் மூன்றுசொட்டு உச்சியில் இரண்டுவேளை போடவும். இவ்விதம் மூன்றுநாள் செய்யவும். மூக்கில்வரும் ரக்தம் நிற்கும்.

பாரகத்தின் பட்டையை மோரில் அரைத்துத் தேய்க்க சொறி சிரங்கு தீரும்.

எட்டிக்கொட்டையை ஜலத்தில் அரைத்துத் தொப்புளில் தேய்க்கவும். சுகப்பிரஸவம் ஏற்படும். பிரஸவித்தவுடன் அலம்பி விடவும். ஆடாதோடையை அரைத்து உள்ளங்கை உள்ளங் காலில் தேய்க்கவும் குழந்தை பிறக்கும் உடன் அலம்பிவிடவும்.

தாம்பிரபஸ்மத்தை ஒரு கிராம் சர்க்கரையில் சாப்பிடவும். குல்மம், சூலம், ஆந்திரவாயு, மூலம், காஸம், சுவாஸம், மஹோ தரம், விஸர்பம், பாண்டு, அஜீர்ணம், வாதம் தீரும். புண்புரை முதலியதற்கு நல்லது. பால்சாதம் முருங்கை சேர்க்கலாம். விளக்கெண்ணெய் தேய்க்கவும்.

துத்தாதி: துத்தம், துரிசு, படிக்காரம், சங்குபடிக்காரம், பாஷாணம், கௌரிபாஷாணம், சுண்ணும்பு, இவை சமம் எடுத்து அனைவற்றிற்கும் சமம் வெண்ணை சேர்த்து அரைத்து துணியில் பிடித்து புண்களுக்குப் போடவும். இதில் குங்கிலியமும் கோழி மலமும் சேர்க்கலாம். புண்கள் ஆறும்.

தலைவலிக்கு சந்தனாதி: சந்தனம், ரக்தசந்தனம் இவை வகைக்கு 10 கிராம் வெட்டிவேர், கோஷ்டம், அதிமதுரம், விலா மிச்சவேர் இவை வகைக்கு 20 கிராம் எடுத்துப் பொடி செய்து வஸ்திரகாளிதம் செய்து ஏழுநாள் பன்னீரில் ஊறவைத்து, நிழலில் காயவைத்து 20 கிராம் பச்சைக் கற்பூரம் சேர்த்துப்

பொடித்துத் துணியில் தடவி தலைக்குக் கட்டவும். தலைவலி நீங்கும்.

அஸ்திஸ்ராவத்திற்குக் குளிகை: பழைய எட்டிக்கொட்டை சுத்தம் செய்தது, தேத்தாங்கொட்டை இவை வகைக்கு இரண்டு கிராம், ஜீரகம், காவிமண் வகைக்கு ஒரு கிராம் அரைத்து குளிகை செய்து நுரைப்பாலில் சாப்பிடவும். வெள்ளை, வெட்டை எலும்புருக்கி தீரும்.

சொறிசிரங்குக்கு: ஊமத்தம் இலை ரஸத்தில் பாதரஸம் சேர்த்து அரைத்துத் தேய்க்கவும்.

ஆக்ராணவிரேசனம்: திரிகடு, திரிபலை, சிவதைவேர் வாய்விளங்கம், கொன்னைப்புளி, புரசம்விதை, இலுப்பைப்புண்ணாக்கு இவைகளுக்கு சம எடை கடலாமணக்கின் விதை (சுத்தி செய்த வாளம் சேர்க்கலாம்). இவை பொடி செய்து முற்றின தேங்காய் கண் திறந்து இளநீர் களைந்து இந்தப்பொடியை அதற்குள் போட்டு முருங்கை வேரால் கண்ணை அடைத்து ஜலப்பசை உள்ள இடத்தில் புதைத்து வைத்து 45 நாள் கழித்து எடுத்து தேங்காயை உடைத்து உள்மருந்தை ஒரு பாத்திரத்தில்விட்டு மூன்று நாள் வெய்யிலில் வைத்து (ஒரு பக்கமாகச் சாய்த்து வைத்திருந்து) அதிலிருந்து வரும் தைலத்தை எடுத்து சீசாவில் விட்டுவைக்கவும். ஆம்பல்பூ, நெய்தற்பூ, செம்பகப்பூ இவைகளில் ஏதாவது ஒன்றை ஷ தைலத்தில் நனைத்து முகர்ந்து பார்க்கவும் பேதியாகும்.

காது கனமாகத் தடிக்க: ஜீவனபஞ்சமூல கஷாயத்தில் எருமை நெய் சேர்த்து அதிமதுரம், அரக்கு, கூகைநீர், காவிமண், மூங்கில்தோல் இவை கல்கம் சேர்த்து பால் சேர்த்துக் காய்ச்சி வடிக்கவும். காதின் வளியில் போட லேசான வளி பெரிதாகும். (பழைய காலம் பெரிய ஓலை கர்ணபரணம் போட்டுக்கொள்ளுகிறவர்க்கு இது உபயோகம்).

அபின் சாப்பிடுவது நிற்க: ஊமத்தங்காய் முற்றினதாகப் பார்த்து எடுத்து நான்கு பக்கமும் துளைத்து ஒவ்வொரு துளைக்கும் ஒரு பணவெடை அபின் செலுத்தி ஏழுநாள் ஜலத்தில்போட்டு வைத்திருந்து மறுபடியும் ஒரு பணவெடை அபின் சேர்த்து அரைத்து ஷ விழுதை அபின் சாப்பிடும் அளவிற்கு ஒரு பங்கு அதிகம் சாப்பிடவும். அபின் சாப்பிடும் வழக்கம் நிற்கும்.

குழிநகத்திற்கு: மனேசிலே, துரிசு, துத்தம், அபின், மெழுகு வெல்லம் இவைகளை நன்ருகப் பொடி செய்து பச்சை உறிமட்டை ரஸத்தில் காய்ச்சி குழம்பாகச் செய்து குழிநகத்தில் போட வலி முதலியன தீரும் நகம் நன்ருகும்.

வாயு முட்டுவதற்கு: சிறுபீளைவேர், ஓரிலேவேர், மூவிலே வேர் குருந்தொட்டிவேர், பனம்துளிர், அரத்தை, புத்திரிச் சுண்டை வேர், திராக்ஷை, மூங்கில் இலே, அதிமதுரம், வில்வ வேர், தேவதாரம் இவை கஷாயம் வைத்து நெய் கலந்து சாப்பிட வும். வாயு முட்டல், இளைப்பு, உப்புஸம், விக்கல் முதலியன தீரும்.

வாய் புண்ணுக்கு: வேப்பிலே மூன்று பங்கும், மிளகு ஒரு பங்கும் எடுத்து அரைத்து நெல்லிக்காய் அளவு புளித்த மோரில் இரண்டு வேளை சாப்பிடவும் வாய்ப்புண் தீரும்.

பச்சைக்கற்பூரம் செய்யும் முறை: ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிராம்பு, சூடம் இவை சம எடை எடுத்து கதளிவாழைக் கிழங்கு ரஸத்தில் அரைத்து உருட்டி ஒரு பீங்கானில் வைத்து மற்ருெரு பீங்கானல் அடைத்துச் சீலைமண் செய்து ஒரு சட்டியில் பாதி மணல்போட்டு அதில் பீங்கான் முக்கால் பாகம் மூடவைத்து அடுப்பில் வைத்துக் கமலாக்னியாக எரிக்கவும். மணல் சுட்டால் எடுத்து ஆறவைத்து உபயோகிக்கவும்.

புண்களுக்குக் குழம்பு: துத்தம், துரிசு வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து அரைக்கால் லிட்டர் தேங்காய் எண்ணெய்யில் அரைத்துக் குழப்பிச் சுடவைத்து அதில் 12 கிராம் மெழுகுபோட்டு மறுபடியும் சுடவைத்துப் பிறகு 2 கிராம் வெண்காரம் போட்டு மறுபடியும் சுடவைத்து ஆறின பிறகு கலந்து புண்களில் போடவும்.

அதிகப்படியான புண்களுக்குப் பச்சைக்கர்பூராதி: பச்சைக் கற்பூரம் கிராம் 10, காவிக்கல் கிராம் 20, துத்தம் கிராம் 30, அதி மதுரம் கிராம் 40, கார்போக அரிசி கிராம் 50, புங்கம்பட்டை கிராம் 60 இவைகளை எலுமிச்சம்பழத்தில் அரைத்து நெய் கலந்து போடவும்

சிரங்குகளுக்கு வம்சாதி: மூங்கில் மேல்பட்டை, ஆட்டு மலம் இவை பாலில் அரைத்து மர்மகுளிகை சேர்ந்த நெய்யில் கலந்து போடவும் உடைந்து போகும்.

அஜமாம்ஸகிருதம்: அரத்தை, தசமூலம், தண்ணீர்விட்டான் கிழங்கு வகைக்கு 70 கிராம், கொள்ளு 320 கிராம், ஆட்டு மாம்ஸம் 500 கிராம் இவைகளை 16 லிட்டர் ஜலத்தில் கஷாயம் வைத்து நான்கில் ஒன்ருக வற்ற வைத்து வடிகட்டி, 4 லிட்டர் நெய் கலந்து சமன் பசுவின் பால் சேர்த்து ஜீவநீயகணம் வகைக்கு 40 கிராம் கல்கம் சேர்த்து பதமாகக் காய்ச்சி வாத ரோகங்களில் பானம் நஸ்யம் பஸ்தி முதலிய பலவிதம் உபயோகிக்கத் தீரும். பஞ்சகாஸம், தலை ஆடுதல், யோனிவலி, மூட்டு வலிகள், ஸர்வாங்கவாதம், ஏகாங்கவாதம், பிலீகம், மேல் நோக்கிய வாயுக்கள் தீரும்.

குமாரி பஸ்மம்: உருக்குத்தூள் 6 கிராம், கந்தகம் 4 கிராம். ரஸம் 1கிராம் ரஸத்தை கந்தகத்தோடு சேர்த்து அரைத்துப் பிறகு எல்லாம் சேர்த்து சோற்றுக்கற்ருழை ரஸத்தில் 90 நாழிகை அரைத்து ஒன்று சேர்த்து ஒரு தாம்பிரக்கிண்ணத்தால் மூடி அதற்குமேல் குழவியை வைக்கவும். பஸ்மமான பிறகு எடுத்து ஒரு டெசிக்ராம் ஜீனி நெய் கலந்து சாப்பிடவும். சூலம் முதலிய எல்லா வயிற்றுவலியும் தீரும். வெய்யிலில் பஸ்மமாகாவிடில் வறுத்தும் பஸ்மம் செய்யவும். காந்தத்தால் கிண்ணி செய்து மூடவேண்டுமென்று சிலர் சொல்லுகிருர்கள். இதுவே ஸ்வயமக்னி எனப்படும்.

வாத குல்மத்திற்கு குக்குடலவணம்: பஞ்சகோல கஷாயத்தில் பித்தம் குடல் மலப்பை, கால், மூக்கு இவை நீக்கிய கோழி மாம்ஸம் 640 கிராம், கரி உப்பு 640 கிராம், 4 லிட்டர் தேங்காய் பால், தேங்காய் எண்ணை அரைக்கால் லிட்டர், நெய் அரைக்கால் லிட்டர் சேர்த்துகாயம் திரிகடு, ஜீரகம், கருஞ்சீரகம் இவை 10 கிராம் பொடித்துப் போட்டு சீலைமண் செய்து 90 நாழிகை எரித்து எடுக்க பஸ்மம் ஆகும் ஒரு டெசிக்ராம் பஸ்மத்தை வெண்ணையில் சாப்பிட்டு மோர் அனுபானம் சாப்பிடவும்.

தலைவலிக்கு: கறளகத்தின் (உறிகட்டி) வேர் நான்கு விரல் நீளத்தில் முறித்து ஒரு பாகத்தை நன்ருக நசுக்கி ரஸத்தை வலது பாகம் வலியானுல் இடது மூக்கிலும் இடது பாகம் வலியானுல் வலது மூக்கிலும் உள்விட்டு உறுஞ்சவும். அதையே காஞ்சொரி வேர் இடித்து எடுத்த ரஸத்தில் அரைத்து நெற்றியில் போடவும் எல்லாத்தலைவலியும் தீரும்.

தலைவலிக்கு: தலைவலி ஆரம்பித்தபொழுது தும்பை வேர்ப் பட்டையைக் கசக்கி அடிக்கடி முகர்ந்து பார்க்கவும்.

தேவதார்வாதி: தேவதாரம், குருந்தொட்டிவேர், அரத்தை, சுக்கு, சந்தனம், கோஷ்டம், இவைகளைக் காடியில் அரைத்து நெற்றியில் பற்றுபோடவும். வாதத்தலைவலி தீரும்.

வெட்டிவேர் ஆதி: வெட்டிவேர் சந்தனம், விலாமிச்சம் வேர், நீரடிமுத்துவேர், நெல்லிக்காய், இவைகளைப் பாலில் அரைத்துத் தலையில் போடவும். பித்தத்தலைவலி தீரும்.

தாடிமாதி: மாதளம்வேர், முருங்கைவேர், கோஷ்டம், சுக்கு, ஜீரகம், இவை அரைத்துத் தேய்க்கவும். சிலேஷ்மத்தலை வலி தீரும்.

அகோரியாதி: அகோரிவேர், நீரடிமுத்துவேர், இவைகளை அரைத்து நெற்றியில் போட எல்லாவிதமான தலைவலியும் தீரும்.

நிசாதி: மஞ்சள், மிளகு, இவை சேர்த்துத் திரிசெய்து எண்ணெயில் நனைத்து தலைவலி எந்தப்பக்கமோ அந்த மூக்கில் புகை பிடிக்கவும். வலி தீரும்.

மாஷாதி: உளுந்து, கொள்ளு, பாசிப்பயறு, சுக்கு, குருந் தொட்டிவேர், வில்வவேர், இவை கஷாயம் வைத்து நெய் மேம் பொடி சேர்த்துச்சாப்பிட தலைவலி தீரும்.

வெட்டுக் காயத்திற்கு: ரக்த அபாமார்காதி – செந்நா யுருவி ரஸம் தாரை செய்யவும். ரக்தப்பெருக்கு நிற்கும் ரக்த அபாமார்காதி: சென்னாயுருவி, மொடக்கத்தான், பசுமஞ்சள், இவைகளை அரைத்துத் தேய்க்கவும், ரக்தப்பெருக்கு நிற்கும். மூக்குற்றி ஆதி: மூக்குற்றியை அரைத்துத் தேய்க்கவும். ரக்தப் பெருக்கு நிற்கும். தென்னம்பூவை அரைத்து அரிசி கழுநீரில் கலக்கி தாரை செய்யவும். ரக்தக்குழாய் கெட்டுவரும் ரக்தப் பெருக்கைக் குறைக்கும். விரியாத தென்னம் குரும்பையை அரைத்து அரிசி கழுநீரில் சாப்பிடவும். ரக்தப்போக்கு நிற்கும்.

நெருப்பு சுட்ட புண்ணிற்கு: தாழைஇலை ரஸம் தாரை செய்யவும் மொதக்கம் இலை அரைத்துக் காடியில் கலக்கிச் சுண்ணாம்பு கலந்து தேய்க்கவும். மீனங்காணி பிழிந்து நெய் வடித்துத் தாரை செய்யவும். முன்குணமுண்டாம். வெட்டி வேரையும் இலையையும் அரைத்துத் தேய்க்கவும்.

நாலாம்முறை காய்ச்சலுக்கு: தும்பையிலை ரஸம் சாப் பிடவும்,

மூக்கில் சதை வளருவது போக: காட்டு மிளகு, கொடு வேலி, மரமஞ்சள், திருத்தாவிதை, இந்துப்பு சிறுவழுதினை, இவை கல்கம் சேர்த்து எண்ணைக்கு சமன் எருக்கம்பால் சேர்த்து நாலு மடங்கு கோமூத்ரம் சேர்த்து வடித்து ஸ்நானம் செய்ய நாஸார்சஸ் தீரும்

வியாக்ரியாதி: சிறுவழுதினை, நாகதந்திவேர், திருத்தா விதை, திரிகடு, இந்துப்பு, இவை கல்கம் சேர்த் துஎண்ணை

வடித்து நஸ்யம் செய்யவும். மூக்கில் சீழ்பிடித்து துர்நாற்றம் வீசுவது தீரும்.

ரக்தகுல்மத்திற்கு : இஞ்சி, உள்ளிப்பூண்டு (தோல் நீக்கியது,) கொட்டைக்கரந்தை, மாங்காநாறி, இவை வகைக்கு 160 கிராம் எடுத்து 4 லிட்டர் ஜலத்தில் இடித்துப் பிழிந்து வடிகட்டி இரண்டு தேங்காய் உடைத்துப் பால் எடுத்துச் சேர்த்து அரைக்கால் லிட்டர் விளக்கெண்ணெயும் சேர்த்து திரிகடு, ஜீரகம், கருஞ்சீரகம், காயம், ஆசாளி, வாயுவிளங்கம், இவை வகைக்கு இரண்டு கிராம் பொடித்துச் சேர்த்துக் காய்ச்சி குழம்பு பாகம் ஆகும் பொழுது எடுத்து அரைக்கால் லிட்டர் சாப்பிடவும். தினசரி எண்ணெய் தேய்த்துக்கொள்ளவும். உஷ்ணம் அதிகமாகாமல் பார்த்துக்கொள்ளவும். ரக்தகுல்மம் தீரும்.

வயிற்றுவலிக்கு பஞ்சாங்குரம் மூக்குடி (பிரமத்யா) : நாயுருவி வேர், கழற்சித்துளிர், முடக்கத்தான்துளிர், வரகின்துளிர், சாரணை வேர், இவை சம எடை எடுத்து மோரில் வேகவைத்து கடுக்காய், இந்துப்பு, சுக்கு சேர்த்து அரைத்து மோரில் கலக்கிக் காய்ச்சி பாதியாக வற்றினவுடன் சாப்பிடவும். சூலம் தீரும்.

பல் கெட்டியாக ஸைந்தவாதி எண்ணெய் : இந்துப்பு, சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு, மஞ்சள், காயம், மாவின் இலை, இவை சமன் அரைத்துக்கலக்கி எண்ணெய் வடித்துக் கபளம் செய்யவும். பல் கெட்டியாகும்.

வாத ரக்தத்திற்கு : சிறுகடுகு, கொட்டைமுத்து, தண்ணீர் விட்டான்கிழங்கு, பாக்குமரத்தின்பூ, சிறுநெல், இவை சமம் பாலில் புழுக்கி, அரைத்துத் தேய்க்கவும்.

அரையாப்புக் கட்டிக்கு : அத்திப்பட்டை, சந்தனம், அதிமதுரம், தேத்தான்கொட்டை, கடுக்காய், சங்கு, கலைமான்கொம்பு, ரக்தசந்தனம், யானைக்கொம்பு, இவை சமம் எடுத்து ஜலத்தில் அரைத்து ஜலம் வற்றின பிறகு நெய் கலந்து கட்டிக்குமேல் தேய்க்கவும்.

மைக்கு : குப்பமஞ்சள் இலை. கருந்தும்பை இலை, வெள்ளை அமல்பொரியன் இலை, இவை சமம் வறுத்துக்கலக்கி எண்ணெயில் குழைத்துப்போடவும்.

ஜாதிக்காயைச் சுட்டுக்கருக்கி எண்ணையில் குழப்பி கொஞ்சம் ரஸம் சேர்த்துக் குழப்பிப்போடவும்.

சுளுக்குக்கு: ஆனையடியன் பறித்து நடுத்தண்டிற்கு நடுவில் பிளந்து இரண்டு தலைக்கும் ஆள் நின்று பிடித்துக் கொண்டு நடுவில் வியாதியஸ்தன் சுளுக்கு இருக்கும் பாகத்தை காண்பித்து அந்தபாகத்திற்குமேல் கையால் இந்த மருந்தைத் தேய்க்கவும். சூடு ஏறும்பொழுது சுளுக்கு விடும்.

ரக்தப்பெருக்கு நிற்க: புத்திரம்சாரி அரைத்து காயத்தில் தேய்க்கவும்.

காயம் ஆறுவதற்கு: நாகைத்துளிர், பால்வள்ளி இலை, கஞ்சிக்கொட்டகத்திலை, கூர்முள்ளி இலை புண்டரீகத்தின் இலை, இதில் எதாவது அரைத்து வைத்துக் கட்டவும் காயம் காயும்.

வீக்கம் முதலியதற்குப் பற்றுப்போட புழுக்கு மருந்து: தாமரைவளையம், தொட்டாச்சுருங்கி, வெப்பாலைப்பட்டை, சீந்திற் கொடி, திரிபலை, மஞ்சள், கடுகு, கோரைக்கிழங்கு, விலாமிச்ச வேர் குஞ்சிரிக்கை, எள்ளு, நால்பாமரப்பட்டை, வெட்டிவேர், கொளவிக்கூடு, அருகம்பில், கரும்பின்வேர், ஆலம்மொக்கு, நன்னரி, இந்துப்பு. ஸ்ரீதாளி பர்பாடகம், கொட்டைமுத்து, தென்னம்பூ, இவை பாலில் அரைத்து எண்ணெய், நெய் தேன், கலந்து போட எல்லா வீக்கங்களும் தீரும்.

---

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS
(REGD.)
Wholesale Musk, Saffron and Iudian Drugs
Merchants,
LUDHIANA - PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

# இம்ப்காப்ஸ்

## பூரண இயந்திர சாதன

### வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறிரோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.


IMPCOPS

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)


maa/IMP-/747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அநுபவத்தினல்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எங்கிலேயிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press, Tiruchirapalli-2